இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 87 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 19 – ஞாயிற்றுக்கிழமை 05 நவம்பர் 2023 – வெளியூர் 10 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 87: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 19 - Sunday 05 November 2023 - Dak 10 + 8 Pages ₹ 5.00


## சென்னையில் மழை என்றால் ‘வெள்ளம் வருமோ’ என்று

# மக்கள் பதறும் காலம் மாறிவிட்டது!



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நேற்று (04.11.2023) சென்னை, அடையாறு, பெசன்ட் நகரில், “நடப்போம் நலம் பெறுவோம்” 8 கி.மீ. Health Walk திட்டத்தின் கல்வெட்டினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மேயர் திருமதி.ஆர்.பிரியா, மூத்த பத்திரிகையாளர் ‘இந்து’ என் ராம், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.தமிழச்சி தங்க பாண்டியன், மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி என்.வி.என். சோமு, சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, தாயகம் கவி, அசன்மௌலானா, பிரபாகர் ராஜா, பரந்தாமன், மயிலை த.வேலு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் கோவிந்தராவ், இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை டாக்டர். டி.எஸ்.செல்வவிநாயகம், காவல்துறை துணை ஆணையர் (அடையார்) பொன். கார்த்திக்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் துரைராஜ், கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, நவ. 5 -**

**“சென்னையில் மழை என்றால் வெள்ளம் வருமோ என்று மக்கள் பதறும் காலம் மாறி விட்டது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளார்.**



தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களில் மிக கனமழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. தென்காசி, நெல்லை, தேனி, கோவை, நீலகிரி மாவட்டங்களில் மிக கனமழை பெய்யக் கூடும். 13 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகை, ராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களில் கனமழை பெய்யக் கூடும். மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை என்பதால் 12 முதல் 20 செ.மீ. வரை மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) பலத்த மழை பெய்தது. இதனால், தாமிரபரணியில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அணைப் பகுதிகளிலும் பிற இடங்களிலும் நேற்று முன்தினம் இடியுடன் பலத்த மழை பெய்தது. திருநெல்வேலி மாநகர பகுதி சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்தது.

பலத்த மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1,082 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 404 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது. மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 366 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 10 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பிற்பகலிலும், மாலையிலும் பல்வேறு இடங்களில் இடியுடன் பலத்த மழை பெய்தது. மாலை 4 மணி நிலவரப்படி அம்பாசமுத்திரத்தில் 20 மி.மீ, சேரன்மகாதேவி 8, மணிமுத்தாறு 15.20, நாங்குநேரி 3, பாளையங்கோட்டை, பாபநாசம் தலா 15, ராதாபுரம்8, திருநெல்வேலியில் 30 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

கனமழையால் மக்கள் பாதிக்காதவாறு தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**சென்னையில் மழை என்றதுமே வெள்ளம் வருமோ என்று பதறும் காலம் மாறிவிட்டது. தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதும் மேற்கொண்ட பணிகளே அதற்குக் காரணம்!**

**தூர்வாருதல், புதிதாக 876 கி.மீ.க்கு மழைநீர் வடிகால் அமைத்தது உள்ளிட்ட நமது அரசின் செயல்பாடுகளால் கனமழையின் தாக்கம் மக்களைப் பாதிக்காதவாறு தடுக்கப்பட்டுள்ளது.**

**அடுத்த சில நாட்களுக்குக் கனமழை பெய்யும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், அமைச்சர் பெருமக்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பெருநகர மாநகராட்சி உயர் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் என அனைவரும் களத்தில் மக்களுக்குத் துணை நின்று பணியாற்றிடவும். மக்களுக்குச் சிறு இன்னல் கூட ஏற்படாமல் தடுக்க திராவிட மாடல் அரசு இருக்கிறது என்ற நம்பிக்கையை மேலும் வலுப்படுத்திடுவோம்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

## அனைத்து மாவட்டங்களிலும் - 8 கி.மீ. சுகாதார நடைபாதை திட்டம்!

# அனைவரும் பயன்படுத்திக் கொள்வீர்! நடப்போம்! நலம் பெறுவோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘ட்விட்டர்’ பதிவு!

சென்னை, நவ. 5 -

8 கி.மீ. சுகாதார நடைபாதை (Health Walk) திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில் முதல்வர் அவர்களின் ‘ட்விட்டர்’ பதிவு வருமாறு:-

“இத்திட்டத்தை அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்! நடப்போம்! நலம் பெறுவோம்”! என்று குறிப்பிட்டுள்ளார்.

நீரிழிவு நோயும், இரத்த அழுத்தமும் இந்தியர்களைப் பெரிதும் அச்சுறுத்துகின்றது. இதற்கு ஆரம்பகட்ட தீர்வாக மருத்துவ உலகம் முன் வைப்பது முறையான நடைப்பயிற்சியும் உடற்பயிற்சியும்தான்.

எனவே, அனைத்து மாவட்டங்களிலும் நமது அரசு தொடங்கியுள்ள நலவாழ்வு நடைப்பயிற்சி 8 கி.மீ. சுகாதார நடைபாதை (Health Walk) திட்டத்தை அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்!

**நடப்போம்! நலம் பெறுவோம்!**

இவ்வாறு அப்பதிவில், முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## பொதுமக்களிடையே நடைபயிற்சியை ஊக்குவித்திட

# ‘நடப்போம் - நலம் பெறுவோம்’ திட்டம்!

### சென்னையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ. 5 -

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நேற்று (04.11.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, அடையாறு டாக்டர் முத்துலட்சுமி பூங்கா அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 8 கிலோ மீட்டர் தூரம் கொண்ட நடைபாதைகள் கண்டறியப்பட்டு மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று நலவாழ்வு பேணுவதற்கான நடைபயிற்சியை ஊக்குவிக்கும் வகையில் “நடப்போம் நலம் பெறுவோம்” (Health Walk) திட்டத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து நடைபயிற்சி மேற்கொண்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் 2023-24 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், உலக சுகாதார அமைப்பின் தரவுகள்படி உடற்பயிற்சி செய்வது நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த நோய்களின் தாக்கத்தை 27 சதவிகிதமும், இதயநோயின் தாக்கத்தை 30 சதவிதமும் குறைக்கின்றது என்று அறியப்படுகிறது. நடைபயிற்சியானது மக்களை சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும் நாள்பட்ட உடல் பிரச்சினைகள் மற்றும் மன அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது.

ஆகவே “நடப்போம் நலம் பெறுவோம்” என்பதற்கிணங்க பொதுமக்களின் நலன் மற்றும் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு அனைத்து மாவட்டங்களில் உள்ள நகராட்சி அமைப்புகளுடன் இணைந்து 8 கிலோ மீட்டர் தூரம் கொண்ட நடைபாதையை கண்டறிந்து, ஆரோக்கியமான நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதைகள் ஏற்படுத்தப்படும். இதன் அடிப்படையில் அனைவரும் தினந்தோறும் நடைபயிற்சி மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுவதோடு ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் மக்களுடன் இணைந்து மாவட்ட அலுவலர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகிய அனைவரும் சுகாதார நடைபயிற்சியில் பங்கேற்பார்கள். நடைப்பயிற்சியின் முடிவில் ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் நல்வாழ்வு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**ரூ. 57 லட்சம் நிதி ஒதுக்கீடு!**

அந்த அறிவிப்பிற்கிணங்க, அனைத்து மாவட்டங்களில் நகராட்சி அமைப்புகளுடன் இணைந்து 8 கிலோ மீட்டர் தூரம் கொண்ட நடைபாதை கண்டறியப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த சுகாதார நடைபாதைகளில் நடைப்பயிற்சி, தொற்றா நோய் மற்றும் சுகாதார விழிப்புணர்வு கொண்ட வாசகங்கள், வழிகாட்டிகள், மைல்கற்கள், ஓய்வு இருக்கைகள், குடிநீர் வசதி போன்ற மக்களின் அத்தியாவசியமான தேவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இத்திட்டத்திற்கு 57 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் தேவையான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

அதன்படி “நடப்போம் நலம் பெறுவோம்” (Health Walk) திட்டத்தை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று சென்னை, அடையாறு டாக்டர் முத்துலட்சுமி பூங்கா அருகில் தொடங்கி வைத்து நடைபயிற்சி மேற்கொண்டார். மேலும், இத்திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக கோயம்புத்தூர், மதுரை திருச்சிராப்பள்ளி மற்றும் தேனி மாவட்டங்களைச் சேர்ந்த பொது மக்கள் இத்திட்டத்தை செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்தார்கள்.

**மக்கள் இயக்கமாக மாற்றப்படும்!**

இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி மக்கள் இயக்கமாக மாற்றுவதற்காக அனைத்து சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர்களும் நகராட்சி அமைப்புகளுடன் இணைந்து ஒரே ஆரம்பம் மற்றும் முடியும் இடம், பசுமையான நடைபாதை, ஓய்வு - உட்காரும் வசதி, இரு சக்கரம் வாகனங்கள் நிறுத்துமிடம், நான்கு சக்கரம் வாகனங்கள் நிறுத்துமிடம், குப்பையில்லாத தூய்மையான நடைபாதை, நிழற்கூடங்கள், வழிகாட்டிகள், குடிநீர் அருந்துமிடம், சுகாதார விழிப்புணர்வு வாசகங்கள் கொண்ட பதாகைகள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா, மூத்த பத்திரிகையாளர் ‘இந்து’ என்.ராம், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.தமிழச்சி தங்க பாண்டியன், மாநிலங்களவை உறுப்பினர் திருமதி.கனிமொழி என்.வி.என். சோமு, சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, தாயகம் கவி, அசன்மௌலானா, பிரபாகர் ராஜா, பரந்தாமன், மயிலை த.வேலு, சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமை செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் கோவிந்தராவ், இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை டாக்டர். டி.எஸ்.செல்வவிநாயகம், காவல்துறை துணை ஆணையர் (அடையார்) பொன்.கார்த்திக்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் துரைராஜ், கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.